அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கை : 25/2018

எனது இல. CS/SLAS/TRANS/DECISION
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.10.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
ஆணைக்குழு செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்/ அரச அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றுகின்ற நாடளாவிய சேவைகளுக்குரிய அலுவலர்களின் வருடாந்த இடமாற்றங்களை அமுல்படுத்தல்**

அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தேச்சையாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் அமுல்படுத்தும் பொருட்டு விசேட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றனவென இனங்காணப்பட்டுள்ள நாடளாவிய சேவைகளுக்குரிய அலுவலரொருவரது சேவையை தொடர்ந்தும் குறித்த அமைச்சு/திணைக்களத்துக்கு பெற்றுக் கொள்வது அத்தியாவசியமென தீர்மானிக்கப்படும் பட்சத்தில், அமப/18/2036/805/062 மற்றும் 2018.09.19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய அந்த அலுவலர் வருடாந்த இடமாற்ற திட்டத்திற்கு கீழ்ப்படாது 2020 டிசெம்பர் 31 ஆந் திகதிவரை தற்போதுள்ள சேவை நிலையத்திலேயே தொடர்ந்திருப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுப்பதற்கு கீழ்ப்பட்டு, குறித்த நிரல் அமைச்சுக்களின் செயலாளருக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

02. குறித்த அலுவலர் தற்போதைய சேவை நிலையத்திலேயே தொடர்ந்திருப்பதற்கான கோரிக்கை அவ் அலுவலரின் எழுத்துமூல இணக்கப்பாட்டுக்கு அமைய குறித்த நிர்வாக அதிகாரியின் அவதானிப்பு மற்றும் சிபார்சுடன் இத்துடன் காணப்படும் மாதிரிக்கமைய அரச சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

03. அலுவலர் 2019 வருடாந்த இடமாற்ற கட்டளையின் கீழ் இடமாற்றம் பெற்றுள்ள அலுவலராயின், குறித்த கோரிக்கை 2018.11.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

04. அலுவலர் மாகாண அரச சேவையில் சேவையாற்றுகின்ற ஒருவராயின், மேற்படி கோரிக்கை குறித்த மாகாண பிரதம செயலாளரினால் அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

05. நீண்ட காலமாக தூர / விருப்புக்குரியதற்ற சேவை நிலையங்களில் சேவையாற்றி, வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இலகுவான / விருப்புக்குரிய சேவை நிலையமொன்றுக்கு இடமாற்றம் பெற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்ற அலுவலர்களுக்கு நேரக்கூடிய அசௌகரியங்கள் குறைக்கப்படுவதுடன், அலுவலரொருவரை தொடர்ந்திருக்கச் செய்வது தொடர்பாக முக்கியமான மற்றும் அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் இச் சுற்றறிக்கையின் கீழ் கோரிக்கைகளை சமர்ப்பிக்க முடியும்.

06. இச் சுற்றறிக்கையின் கீழ் இடமாற்றங்களை இரத்துச் செய்யும் அலுவலர்களின் தகவல்கள் அந் நாடளாவிய சேவைகளின் பிற அலுவலர்களும் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளியிடுவதற்கு குறித்த நிர்வாக அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இச் சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுக்கமைய வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
அரசாங்க நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

அமுஅ/18/2036/805/062 மற்றும் 2018.09.19 ஆந் திகதிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக 2020 டிசெம்பர் வரை தற்காலிக இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் சம்பந்தமான தகவல்களைச் சமர்பித்தல்

அ/. தனிப்பட்ட தகவல்கள்

<table>
<tr><td>01. முதலெழுத்துக்களுடன் பெயர்</td><td colspan="4"></td></tr>
<tr><td>02. பதவி மற்றும் வகுப்பு</td><td colspan="4"></td></tr>
<tr><td>03. பிறந்த திகதி</td><td>04. வயது (2018.12.31 இல்)</td><td colspan="2">05. தேசிய அடையாள அட்டையின் இலக்கம்</td><td>06. பால் நிலை/</td></tr>
<tr><td>07. நிரந்தர முகவரி</td><td colspan="2">08.தற்காலி முகவரி</td><td colspan="2">09. தொலைபேசி இல.<br>அலுவலகம்<br>தனிப்பட்ட</td></tr>
</table>

ஆ. சேவை தொடர்பான தகவல்கள்

<table>
<tr><td colspan="3">10. அலுவலரது சேவை வகுதி</td><td colspan="3">11.சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி</td></tr>
<tr><td colspan="3">12. தற்போதுள்ள தரம்</td><td colspan="3">13. தற்போதைய தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி</td></tr>
<tr><td colspan="6">14. முழுமையான சேவைக் காலம் (2018.12.31 இல்)<br>ஆ.....மா...தி... நியமனம் பெற்ற திகதி</td></tr>
<tr><td colspan="3">15. தற்போதைய சேவைக் நிலையம்</td><td colspan="3">16.சேவை நிலையம் அமைந்துள்ள நகரம்</td></tr>
<tr><td colspan="3">17. தற்போதைய சேவை நிலையத்திற்கு அறிக்கையிட்ட திகதி</td><td colspan="3">18. தற்போதைய சேவை நிலையத்தின் சேவைக் காலம் (2018.12.31 இல்)<br>ஆ...... மாதம்.........திகதி...........</td></tr>
<tr><td rowspan="7">19.அரச சேவையின் முன்னைய சேவைக்காலம்</td><td colspan="2">சேவை நிலையம்</td><td>விருப்புக்குரிய சேவை நிலையமாகும்/ விருப்புக்குரியதற்ற சேவை நிலையமாகும்.</td><td colspan="2">சேவைக் காலம்</td></tr>
<tr><td>1</td><td></td><td></td><td>இருந்து</td><td>வரை</td></tr>
<tr><td>2</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>4</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>5</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>6</td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

திணைக்களத் தலைவரின் சிபார்சு

20. அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள்

| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | செயற்படுத்தப்படும் காலப்பகுதி | அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்கள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

21. மேற்படி பணிகளை தொடர்ந்தேச்சையாகவும் பயனுறுதி மிக்க வகையிலும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு இவ் அலுவலரினால் வழங்கப்படும் விசேட பங்களிப்பு

22.அச் சேவையைச் சேர்ந்த வேறொரு அலுவலருக்கு இப் பணிகளை ஒப்படைத்தல் அல்லது குறித்த காலப்பகுதியினுள் அச் சேவையைச் சேர்ந்த பிற அலுவலர் ஒருவருக்குப பயிற்சியளித்து இப் பணிகளை ஒப்படைப்பதன் மூலம் மேற்படி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏன் முடிவதில்லை?

23. அலுவலரை வருடாந்த இடமாற்றங்களுக்கு கீழ்ப்படாது வைத்திருப்பதனூடாக வேறு பிற பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் சிபார்சுகள்

அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ந்தேச்சையாகவும் பயனுறுதி மிக்க வகையிலும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு விசேட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற இவ் அலுவலரின் சேவை தொடர்ந்தும் குறித்த அமைச்சு/ திணைக்களத்துக்கு பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாவதனால், அமைஅ/18/2036/805/062 மற்றும் 2018.09.19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய அந்த அலுவலரின் வருடாந்த இடமாற்றத்தினை...........................வரை தற்காலிகமாக இடைநிறுத்துவது உசிதமானதென சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

............................................. ......................................................................

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

அமைச்சுக செயலாளரின் / மாகாண பிரமத செயலாளரின் சிபார்சு

............................................. ......................................................................

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

அமைச்சுக செயலாளரின் / மாகாண பிரமத செயலாளரின் கையொப்பம்